பெரியாரின் அறிவுலகம்தான் இன்றும் என்றும் தேவை

தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, நவ.6-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தமிழா அறிவு கொள்! பகுத்தறிவைப் பயன்படுத்து என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

“தமிழா அறிவு கொள்!

பகுத்தறிவைப் பயன்படுத்து!

அறிவுதான் இறுதியில் வெல்லும்; உறுதியாய் வெல்லும்!” என்று சொன்ன பெரியாரின் அறிவுலகம்–தான் இன்றும் என்றும் தேவை.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



சர்க்கரை விலை மீண்டும் உயர்வு!

சென்னை, நவ. 6 –

சர்க்கரை விலை கடந்த மாதம் ஒரு கிலோ 55.40 ரூபாயாக இருந்தது. தற்போது, ஒரு கிலோ 59.50 ரூபாயாக அதிகரித்துவிட்டது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சில்லறை விற்பனையில் ஒரு கிலோ 46.50 ரூபாயாகவும், மொத்த விற்பனையில் 43.23 ரூபாயாகவும் இருந்தது.

இந்த ஆண்டு 12 முதல் 13 சதவீதம் வரை விலை உயர்ந்துள்ளது. பண்டிகை கால தேவை உள்ளிட்ட காரணங்களால் சர்க்கரை விலை உச்சத்தை எட்டியுள்ளது. குளிர்பான நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் அதிகளவில் சர்க்கரையை வாங்கி இருப்பு வைத்துப் பயன்படுத்துதே விலை உயர்வுக்கு காரணம் என கூறப்படுகிறது.

எனவே, இனிப்பு தயாரிப்பு நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்க பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மின்சார வாரிய டெண்டர் குளறுபடிகள்!

‘ரீல்ஸ்’ த.வெ.க. அரசு பதிலளிக்குமா?

கேரளாவிற்கு ரூ.8.64, ரூ.12.50, ரூ.14.50 ஆகிய விலைகளில் ஒரு யூனிட் மின்சாரம் கிடைக்கும் போது தமிழ்நாட்டில் ரூ.35–ரூ.37 ரூபாய்க்கு வாங்க முயன்றது ஏன் என்ற கேள்விகளை பலரும் முன் வைக்கிறார்கள் .

மின்சார டெண்டர் தொடர்பாக த.வெ.க. அரசு பதில் அளிக்க வேண்டிய 10 கேள்விகள் பார்ப்போம்.

1. மின்தேவை ஜூலை மாதத்திலேயே அதிகரிக்கும் என்று மின்வாரிய அதிகாரிகள் எச்சரித்ததாக கூறப்படுகிறது. ஆனால் அக்டோபர் 6–ம் தேதி வரை ஏன் தமிழ்நாடு அரசின் மின்வாரியம் காத்திருந்தது.
2. அக்டோபர் 12 முதல் அக்டோபர் 31 வரை மின்சாரம் தேவைப்பட்ட நிலையில், அதற்கு ஆறு நாட்களுக்கு முன்புதான் டெண்டர் வெளியிட வேண்டிய அவசியம் எதனால் வந்தது? ஏன் முன்கூட்டியே டெண்டர் விடவில்லை?
3. ஆந்திர அரசு செப்டம்பர் 9–ம் தேதியே அக்டோபர் மாதத்துக்கான மின்சாரத்தை யூனிட் ரூ.16 முதல் ரூ.20 வரை வாங்க ஒப்பந்தம் செய்தாக தகவல்கள் வந்துள்ளது.ஆனால் ஆந்திரப் பிரதேசத்தால் குறைந்த விலைக்கு வாங்க முடிந்த போது, தமிழ்நாட்டால் ஏன் அதேபோன்ற முன்கூட்டிய ஏற்பாட்டைச் செய்ய முடியாமல் போனது
4. அதேபோல் ஜூன் மாதங்களில் இருந்தே மின்சாரம் பல இடங்களில் அடிக்கடி கட்டாகி வந்தது. இப்படியான சூழலில் அக்டோபரில் மின்சாரப் பற்றாக்குறை திடீரென ஏற்பட்டதா? அல்லது திட்டமிடலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவசரக் கொள்முதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறதா? என்ன காரணத்திற்காக ரூ.35–ரூ.37 கொடுத்து வாங்க வேண்டிய நிலை தமிழ்நாட்டிற்கு ஏற்பட்டது?
5. கேரளாவுக்கு ஒரு தனியார் நிறுவனம் 500 மெகாவாட் மின்சாரத்தை யூனிட் ரூ.8.64 விலையில் 24 மணி நேரமும் வழங்க முன் வந்ததாகச் செய்தி வந்துள்ளது. இதுபோன்ற நிறுவனங்களிடம் தமிழ்நாடு ஏன் முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடத்தவில்லையா?.. கேரளாவின் ரூ.8.64 மின்சார முன்மொழிவைத் தமிழ்நாடு பரிசீலிக்கவில்லையா?
6. அரசு மின்சார தேவைக்கு குறுகிய கால ஒப்பந்தங்களை நம்பியிருப்பதற்குப் பதிலாக, எதிர்கால மின்தேவையைக் கணித்து மின்சார உற்பத்தி நிறுவனங்களுடன் நீண்டகால ஒப்பந்தங்களை முன்கூட்டியே செய்யாதது ஏன்?
7. காற்றாலை மின்சார உற்பத்தி என்பது எல்லா மாதமும் ஒரே மாதிரி இருக்காது என்பது அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். இது பருவ நிலை மாறுபாடு தான்.. எனவே அதனை நம்பாமல் மாற்று மின்சார ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யாதது ஏன்? காற்றாலை மின்சாரம் குறையப்போவதை முன்கூட்டியே கணிக்காதது ஏன்?
8. என்எல்சி உள்ளிட்ட ஒன்றிய மின் தொகுப்பில் இருந்து போதிய மின்சாரம் திடீரென கிடைக்காமல் போகும் போது, அந்தப் பற்றாக்குறையைச் சமாளிக்க முன்கூட்டியே அரசு கைவசம் வைத்திருந்த திட்டம் என்ன?
9. இறுதியாக ரூ.35, ரூ.37, ரூ.41.50 என விலை குறிப்பிட்ட நிறுவனங்கள் எது? அவற்றின் ஏல விவரங்கள், ஒப்பீட்டு அறிக்கைகள், ஒப்பந்த நிபந்தனைகள் பொதுமக்களுக்கு அரசு வெளியிடுமா? (இப்போது அரசு ரத்து செய்வதாக அறிவித்துள்ளது)
10. ஜூலை மாதத்தில் அதிகாரிகள் அளித்த எச்சரிக்கைகள், மின்வாரியக் கூட்டக் குறிப்புகள், அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் ஆகியவற்றை அரசு வெளியிட தயாராக உள்ளதா? இப்போது எடுத்த முடிவுகளை அரசு வெளிப்படையாக விசாரிக்குமா?

இந்த 10 கேள்விகளுக்கு அரசு பதில் அளித்தால், மின்சார கொள்முதல் விவகாரத்திற்கு விடை கிடைக்கும்.

தூய சக்தியா? ஊழல் சக்தியா?

த.வெ.க. அரசின் வெங்காய கொள்முதல் ஊழல்!

தி.மு.க. ஐ.டி. விங் வலைதளப் பதிவு!

சென்னை, நவ.6-

தி.மு.க. ஐ.டி.விங்கின் வலைதளப் பதிவு வருமாறு:-

யோக்கியமான தூயசக்தி தவெக அரசு, ஒன்றிய அரசின் NAFED நிறுவனத்திடமிருந்து 450 டன் வெங்காயத்தை சமீபத்தில் கொள்முதல் செய்தது.

இந்தக் கொள்முதலுக்கான உத்தரவை மாநில கூட்டுறவுத் துறையின் பதிவாளர் செல்வி G லதா IAS பிறப்பித்திருக்கிறார்.

மத்திய கூட்டுறவு அமைச்சகத்தின் துணைச் செயலாளர் பங்கஜ் குமார் பன்சாலுக்கு இந்தக் கொள்முதல் விவகாரத்தில் தலையீடு இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட வெங்காயத்தின் தரம் மிகவும் மோசமாக இருந்ததாகக் கூறப்படும் நிலையில், கொள்முதல் செயல்பாட்டில் முறைகேடுகள் நடந்திருக்கலாம் என்றும், ஊழல் நடந்திருக்க வாய்ப்புள்ளதாகவும் எழுந்துள்ள சந்தேகங்களுக்கு விடை தேவை.



இந்த விவகாரத்தில் நியாயவிலைக் கடை விற்பனையாளர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாடு கூட்டுறவுத் துறை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தக் கொள்முதலில் எந்த வகையிலும் சம்பந்தப்படாத சாதாரண கடைநிலை ஊழியர்கள் மீது பழிபோடப்படுகிறது என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சென்னையில் உள்ள கூட்டுறவுத் துறை தலைமையகத்தில் 1,000க்கும் மேற்பட்ட மாநில அரசு ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து; போராட்டத்தில் பங்கேற்றதற்காக அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

போராட்டங்கள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, மாநில அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, போராட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெற ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

ஆனால் நடந்திருக்கும் பல நூறு டன் வெங்காய கொள்முதல் ஊழலுக்கு யார் பொறுப்பு? தமிழ்நாடு கூட்டுறவுத்துறையில் என்ன நடக்கிறது?

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆடலுடன் பாடலை ரசித்ததற்கு

ஆட்சியையா பரிசாகத் தருவாய்?

(எண்சீர்விருத்தம்..)

மடமைக்கு மகுடம்..!
ஆரூர் புதியவன்

அருவருப்பாய் இருக்கிறது
தமிழா, உன்றன்
அறிவற்ற செயல்களினை
பார்க்கும்போது..

சிறுமைகளின் சேமிப்புக்
கிடங்காய் மாறி
சினிமா கூத்தாடிகளின்
செருப்பாய் ஆனாய்

பெருமைகளை
சாக்கடையில் வீசிவிட்டு
பேதமையை மகுடம் என
அணிந்து கொண்டாய்..

கருவறுக்கத் துடிக்கின்ற
கூட்டம் அங்கே..?
கவர்ச்சியிலே மயங்கும் நீ
பலியா டானாய்

✡✡✡

குருத்திலையில் புழு
விழுந்து அழிப்பதைப் போல்
குடப்பாலில் நஞ்சு துளி
கலப்பதைப் போல்

கருத்தியலை கவர்ச்சியிடம்
கைவிட் டாயே
களப்போரில் கலக்காமல்
போய்விட் டாயே..!

உருத்தெரியாமல்
நம்மை அழிப்பதற்கு
ஓநாய்கள் படையெடுக்கும்
வேளையில் நீ..!

கருத்தறியாமல் விழுந்தாய்
கவர்ச்சி மீது
கண்மூடித் தனத்தால்நீ
கரி யானாயே..!


✡✡✡

ஆடலுடன் பாடலினை
ரசித்த தற்கு
ஆட்சியையா பரிசாகத்
தருவாய்..? இந்தக்

கேடுகெட்ட புத்தியினால்
சீர ழிந்தாய்,
கீழ்த்தரமாய் அரசியலை
ஆக்கி விட்டாய்

பாடுபட்ட தலைவர்களை
மறந்த நீ தான்
பகட்டுகளை பசப்புகளை
கொலுவில் வைத்தாய்..

நாடு கெட்டுப் போனதற்கு
காரணம் யார்..?
நடிப்புக்கு நாடு தரும்
நீதான் அன்றோ..?



பேராசிரியர் முனைவர் ஜெ.ஹாஜாகனி,
பொதுச் செயலாளர், த.மு.மு.க.

ரூபாய் 5000 கோடி மோசடி வழக்கில் – த.வெ.க.வுடன் தொடர்புடைய

பிரேம்குமாருக்குச் சொந்தமான இடங்களில் சோதனை!

அமலாக்கத்துறையினர் நடவடிக்கை!

சென்னை, நவ.6-

5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் பிளெல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

முதியவர்கள் மற்றும் பொதுமக்கள் முதலீடு செய்த டெபாசிட் தொகைகளுக்கு அதிக வட்டி தருவதாகக் கூறி ஏமாற்றியதாகவும், அந்தப் பணத்தை முதலீட்டாளர்களுக்குத் திருப்பித் தராமல் தனது சொந்த கணக்குகளுக்கும், உறவினர்களின் கணக்குகளுக்கும் திசைதிருப்பியதாகவும் பிளெல்எம் ஹவுசிங் மற்றும் கிரெடிட் சொசைட்டி தலைவர் பிரேம்குமார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் சுமார் 300 ஏக்கர் நிலம் வாங்கியது, ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், திரையரங்குகள் உள்ளிட்ட தொழில்களில் முதலீடு செய்தது, தமிழக கேபிள் டிவி நிறுவனத்துக்கு 16 கோடி ரூபாய் பணப் பரிமாற்றம் செய்தது உள்ளிட்டவை குறித்தும் கேரள குற்றப்பிரிவு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


இந்த வழக்கு தொடர்பாக கேரள பொருளாதார குற்றத்தடுப்பு போலீசார் சென்னையில் வைத்து கடந்த அக்டோபர் 29 அன்று பிரேம்குமாரை கைது செய்தனர். இதன் தொடர்ச்சியாக பிரேம் குமார் மீது அமலாக்கத்துறையும் வழக்குப்பதிவு செய்து விசாரணையைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், சென்னையில் பிரேம்குமார் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். கடந்த ஜூலை 2026ல் பிரேம்குமார் தமிழக முதல்வர் விஜய்யைச் சந்தித்த புகைப்படம் வெளியானது. மேலும், பிரேம் குமாருக்குச் சொந்தமான நிறுவனத்தின் பேருந்துகள் தவெகவின் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சட்டமன்றத் தேர்தல் முடிந்து சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின் போது, தவெக சட்டமன்ற உறுப்பினர்கள், பிரேம்குமாருக்குச் சொந்தமான பேருந்து களிலேயே அழைத்து வரப் பட்டது குறிப்பிடத்தக்கது.

ஓய்.பி.எம். பாலாஜி அலுவலகத்திலும் சோதனை!

இதனிடையே முதலமைச்சர் விஜய் முதல், அமைச்சர்கள் வரை நெருங்கிய தொடர்புடைய ஓய்.பி.எம். பாலாஜியின் கோயம்பேடு அலுவலகத்திலும் அமலாக்கத்துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர். 5 ஆயிரம் கோடி ரூபாய் மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பிரேம்குமாரின் தொழில் பங்குதாரராக இருப்பவர் ஓய்.பி.எம். டிரான்ஸ் போர்ட் நிறுவன உரிமையாளர் பாலாஜி என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; ‘த.வெ.க. ஆட்சியை கவிழ்க்க தி.மு.க. சதி’ன்னு ‘கலெக்சன்’ குமார் சொல்லி இருக்காரே! படிச்சியா?

போண்டி : **ஆமாய்யா; ஆடத் தெரியாதவள் மேடை கோணல்னு சொல்ற மாதிரி, ஒழுங்கா ஆட்சி நடத்த வக்கில்லாதவங்க அப்படித் தான் பேசுவாங்க! அதுக்கு மேலேயும் பேசுவாங்க! விட்டுத் தள்ளுய்யா.**